யோகாசன ஆலய விஜயம்

மலர் 31	காளயுக்தி ஆண்டு வைகாசித் திங்கள் May—1978	இதழ் 5

காணகி லாதார் கழிந்தோடிப் போவார்கள்
காணகி லாதார் நயம்பேசி விடுவார்கள்
காணகி லாதார் கழிந்த பொருளெலாங்
காணகி லாமற் கழிகின்ற வாறே.

திருவருளின் உண்மையைக் காணப்பெருதார் மீண்டும் பிறத்தற் பொருட்டு மாள்வர். பிறவி எடுப்பதில் வெட்கப் படாதவர் கல்வியறிவின் நயங்களை மட்டும் பேசி நாள்களை வீணுகக் கழிப்பர். மெய்ப்பொருள் உண்மை காண மாட்டாதார் அழிந்துபட்ட பொருள்களின் நிலையாமையை அறியாத தன்மையரே ஆவர்.

—திருமூலர்.

சந்தா விபரம்	உள்நாடு	சிலோன்	வெளிநாடு (கப்பல்)	விமானம்
ஆண்டு சந்தா	ரூ. 4—00	ரூ. 6—00	ரூ. 15—00	ரூ. 30—00
ஆயுள் சந்தா	ரூ. 50—00	ரூ. 80—00	ரூ. 150—00	ரூ. 300—00
தனிப்பிரதி	40 காசு	50 காசு	ரூ. 1—25	ரூ. 2—00

உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் பொன்மொழி

பூர்வ ஞானம் :

பிறவிகள்தோறும் பூர்வீக ஞானம் வளர்ந்துகொண்டே வரும். குழந்தைகள் பால் குடிக்குந் தன்மையை நோக்குங் கால் அவ்வுண்மை விளங்கும்!

திருமதி சாவித்திரி செல்வராஜன்.

பௌர்ணமி வகுப்பு

20—6—78 செவ்வாய் இரவு 7 மணிக்குக் கீழ்க்காணும் இடங்களில் வகுப்பு நடைபெறும் :

1, யோகாசன ஆலயம் : 16-A. வன்னியர் முதல் தெரு, சூளைமேடு சென்னை-600 094.

2. அருள்மிகு மன்னூர்சாமி கோவில் : மன்னூர்சாமி கோவில் தெரு, இராயபுரம், சென்னை-600 013.

3. சுந்தர விநாயகர் கோவில் : சின்னநத்தம், செங்கல்பட்டு.

வேள்விப் பயிற்சி வகுப்பு

பிரதிமாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமைகளில். சூளைமேடு யோகாசன ஆலயத்திலும், மூன்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் செங்கை, பெரியநத்தம், பெரிய ரத்தினத் தெரு, எண் 3 இல்லத்திலும், கடைசி ஞாயிறன்று சென்னை புரசைப்பாக்கம் செல்லப்ப கிராமணி தெரு, எண் 13 இல்லத்திலும் வேள்விப் பயிற்சி வகுப்பு நடைபெறும். ஆங்காங்கு கலந்துகொண்டு நற்பயனடைவீராக!

பெரிய புராணம்

திருத்தொண்டர் மாக்கதை இசையும் கதையும் பிரதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு, சென்னை இராயபுரம் மன்னூர்சாமி கோவில் தெருவிலுள்ள அருள்மிகு மன்னூர்சாமி கோவிலில் தொடர்ந்து நடைபெறுகிறது. நிகழ்த்துபவர், புலவர் பா. ஆழ்வார் அவர்கள். யாவரும் கலந்து கொண்டு இன்புறுக!

S. K. மலைக்கனி

கிளைச்செயலர்

மகரிஷி தாயுமானவர்

ஆசையெனும்

திரு. கோ. மு. சுவாமி அவர்கள்

நிகழ்த்திய உரை விளக்கம்.

ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம்பஞ் செனவுமன
தலையுங் காலம்
மோசம்வரும்; இதனாலே கற்றதுங்கேட் டதுந்தூர்ந்து,
முத்திக் கான
நேசமுநல் வாசமும்போய்ப், புலனாயிற் கொடுமைபற்றி
நிற்ப ரந்தோ!
தேசுபழுத் தருள்பழுத்த பராபரமே! நிராசையின்றேற்
றெய்வ முண்டோ?

பதவுரை

(இ-ள்.) ஆசையெனும் - ஆசையென்று சொல்லப்படுகிற, பெரும் காற்றூடு - பெருங்காற்றில், இலவம்பஞ்சு எனவும் - இலவம்பஞ்சு அலைவது போலவும், மனது - மனமானது. அலையும் காலம் - அலையுங் காலத்தில், மோசம் வரும் - மோசம் நேரிடும்; இதனாலே - இதனால், கற்றதும் - கற்ற கல்விகளும், கேட்டதும் - கேட்ட கேள்விகளும், தூர்ந்து - வீணாகி, முத்திக்கு - மோட்சத்திற்கு, ஆன - ஆகிய, நேசமும் - விருப்பமும், நல் - நல்ல, வாசமும் - சிவக்ஷேத்திர வாசமும், போய் - நீங்கி, புலன் ஆய் - ஐம்புலன் வழியாகி, இல் கொடுமைபற்றி - கொடுமையான சமுசாரத்திலழுந்தி, நிற்பர் - ஆசை வலையே கட்டுப் படுவர்; (ஆதலால்) தேசு பழுத்து - ஒளி மிகுந்து, அருள் பழுத்த - அருள் மிகுந்த, பராபரமே! - பராபரமே! நிராசை இன்றேல் - அவா வறுதியில்லையேல், தெய்வம் உண்டோ? - ஒருவனுக்கு தெய்வமுமுள தாமோ? என்க,

கருத்துரை

தன்னையொருவர் எனும் முன் அதிகாரத்தின் கடைசிப் பாடலில் தாயுமான அடிகளார். மனோநிலையில் அகப்பட்டு மயங்குமாறு என்

அறிவில் களங்கம் வந்ததற்கு காரணம் என்னே? என ஒப்பற்ற முதற் பொருளைக் கேட்டனர். ஆசையெனும் என்ற அதிகாரத்தின் முதற் பாடலாகிய இப் பாடலில், இலவம் பஞ்சானது பெருங் காற்றில் அலைவது போன்று, மனமானது ஆசை வயப்பட்டு அலையுங் காலத்தில் கற்ற கல்வி, கேட்ட கேள்விகளனைத்தும் வீணாகும்: வீடுபேறு அடைவதற்கான விருப்பமும் சிவ தலத்தின் வாசமும் நீங்கி ஐம்புலன்களின் கொடுமைக்கு ஆளாவர். ஆதலால் நிராசையாகிய ஆசையற்ற நிலையில்லாதார்க்குத் தெய்வ அருள் உளதாமோ? என்று ஒளிமிகுந்து அருள் பழுத்த பரம்பொருளை நினைந்து கேட்கின்றார்.

விரிவுரை

தெளிந்த அறிவே வேதம் எனப்படுவது வேதத்தை அறிதல் அறிவித்தல் ஒவ்வொரு அங்கத்தினரின் கடமை என்பது யோகாசன ஆலயத்தின் மூன்றாவது கொள்கையாகும், தெளிந்த அறிவினின்றும் போந்த அனுபவங்களைப் பாடல்களின் வழி நிலைபெறச் செய்தனர் சான்றோர். அவையே அருட்பாடலாகும். எஞ்ஞான்றும் நிலைபெற்று இவை மக்களின் அறியாமையை அகற்றித் தூய அறிவை வெளிப் படுத்தும். மருள் நிலையில் எழுதும் பாடல் மருட்பாடலேயாகும். இவை மங்கி மறைந்துவிடும். தூய அறிவினின்றும் வெளிப்பட்ட மகரிஷி தாயுமானவர் அருட்பாடல்களுள் 'ஆசையெனும்' என்று தொடங்கும் இப் பாடலில் ஆசையின் தன்மையும் அதனால் விளையும் கேடுகளும் எடுத்துரைக்கின்றனர்,

ஆசையும் ஆசைக்குக் காரணமாய மனமும் உள்ளவரை ஆன்மா பந்தத்தினின்றும் விடுபடவியலா என்பது பகவான் கண்ணனின் அருளுரையாகும். மிக லேசான பொருள் இலவம் பஞ்சு. காற்றில் பறந்து செல்லும் காற்றழுத்தமில்லாத பொருள் பெருங் காற்றடித்தால் திசையெங்கும் அலைமோதிப் பறக்கும். அதுபோலவே மனமானது இலவம் பஞ்செனெ ஆசையெனும் பெருங் காற்றினால் அலக்கழிக்கப் பட்டு உழன்று சீவனைத் துன்பத்திற்காளாக்குகிறது. சீவனால் அத் துன்பத்தைத் தாங்கவியலவில்லை. எதிர்க்குஞ் சக்தி சீவனுக்கில்லாமையே துன்பத்திற்குக் காரணம். உணர்வு பலம் (அறிவு பலம்) பெறாத மக்கள் சஞ்சலங்களுக்குட்பட்டு தற்கொலை புரிந்துகொள்வதை நாளும் செவியுறுகிறோம். என்னே அறியாமை! வந்த துன்பத்தை நீக்கி இனித் துன்பம் வாராதபடி முன்னதாகவே காக்கவல்ல தன்மையுடையவரைப் போற்றி நட்பு கொள்ளாமையே மக்கள் இவ்விழி நிலைக்குச் செல்வதற்குக் காரணமாகும்.

> உற்றநோய் நீக்கி உறுஅமை முற்காக்கும்
> பெற்றியார்ப் பேணிக் கொளல்

என்ற தெய்வப் புலவரின் திருவாக்கையும் உணர்ந்தாரல்லர். அன்றி பெரியாரின் துணைபெற்ற பின்பு அவர்களின் தொடர்பைக் கைவிடுதல் பலருடைய பகையைத் தேடிக்கொள்வதைவிடப் பன்மடங்கு தீமை யுடையவாகும் என்பதையும்

> பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
> நல்லார் தொடர்கை விடல்

என்றார். பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டியதன் அறிய உண்மையை. இதைவிட நாம் எங்ஙனம் அறியவியலும்? அவர்களோடு

தொடர்பு கொண்டபோது நம் மனத் துயரைப் போக்குவதோடு நம் அறிவையும் தெளிவிக்கின்றனர்.

பஞ்சு காற்றின் வலிமையால் பறக்கின்றது. அதுவே நூலாகி கயிருகி வடமாக மாறியபின் காற்றை எதிர்த்து நிற்கிறது. வலிய பெருந் தேரையும் இழுத்துச் செல்லும் வலிமையும் பெறுகிறது. அங்ஙனமே அலையும் மனதை நிறுத்தித் திரித்தால் அளவற்ற சக்தி பெறுகிறது! மனே சக்தி சீவ சக்தியாகி சிவ சக்தியாக பெருக்கெடுக்கிறது! இதனைத் தாயுமான அடிகளார், "தெருளாகி மருளாகியுழலும் மனமாய் மனம் சேர்ந்துவளர் சித்தாகி, அச் சித்தெலாம் சூழ்ந்த சிவ சித்தாய் விசித்திரமாய்" என்பர்.

இங்ஙனம் படிகள் பல கடந்து செல்வதற்குத் தடையாயுள்ளது ஆசையேயாகும். பாம்பாட்டி சித்தர்

ஆசையென்னுஞ் செருப்பின்மேல் அடிவைத்தே
ஆங்கார முட்காட்டை ஏறிமிதித்தே
காசையெனுந் துர்க்குணத்திற் கனல்கொளுத்திக்
காலாகாலங் கடந்தோமென் ருடாய்பாம்பே

என்று ஆசையைக் கடக்கும் நெறியினை விளக்கினுர்.

ஆசை வயப்பட்ட உலகாயதர், உலகப் பொருள்களின்பால் நாட்டங்கொண்டு அதுவே உண்மையெனவும் நம்பி வாழ்ந்து இறுதியில் துன்புறுவர். தெளிந்த அறிவுடைய ஞானியரோ பூவுலகமட்டுமன்றி தேவலோகப் பொருள்களாய சிந்தாமணி, கற்பகம், காமதேனு ஆகிய அரும்பொருள்களையும் விரும்பார்! ஏனெனில் அவையும் ஆசையின் வயப்பட்டவையேயாகும்.

"பச்சைமா மலைபோல்மேனி பவளவாய்க் கமலச்செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தங்கொழுந்தே என்னும்
இச்சுவை தவிரயான்போய் இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும்வேண்டேன் அரங்கமா நகருளானே

என்பர் தொண்டரடிப் பொடியாழ்வார்.

"வானேயும் பெறில் வேண்டேன்" என்பர் மணிவாசகப் பெருமான். ஸ்ரீராம பட்டாபிஷேகத்தின்போது சீதை மகிழ்ந்து அனுமனுக்கு முத்துமாலை யளித்தார். ஆனுல் அனுமனே ஒவ்வொரு முத்தாகக் கடித்துக் கடித்துத் துப்பினுர். ஏன் எனில், அவற்றில் இராமனில்லை! அனுமனுக்குத் தேவை இராமனே. தெளிந்த அறிவு பெற்றவர்கள் இவ்வுலகில் வாழ்ந்தாரேனும் பார்வைக்கு உலகத்தவர் போலவே வியர்த்தாற் குளித்து, பசித்தால் உண்டு பின்பு நித்தனுகிய பரமன்பால் அன்புகொண்டு உறங்காமல் உறங்கி யிருப்பர். இதனைப் பட்டினத்தடிகள் கூறுகின்ருர்;

மாத்தா னவத்தையும் மாயா புரியின் மயக்கத்தையும்
நீத்தார் தமக்கொரு நிட்டையுண்டோ நித்தன் அன்புகொண்டு
வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று
பார்த்தால் உலகத்தவர் போலிருப்பர் பற்றற்றவரே.

இத்தகைமையோரின் பெருமை அளவிடற்கரியது! "அறிவோடிருந்து இருவினை வாதனையற்று இருந்தான் பெருமையை என் சொல்லுவேன்! என அவரே வியந்து போற்றுகின்ருர்.

ஆசை யறுமின்கள் ஆசையறுமின்கள்
ஈசனே டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே.

என திருமந்திரம் செப்பியவாறு ஆசை அதிகரிக்க அதிகரிக்கத் துன்பங்களே மிகுதியாகின்றன. அவ்வாசைகளை விடவிட இன்பம் பெருக்கெடுக்கிறது. "ஈசனே டாயினும் ஆசை யறுமின்கள் என்பது சுத்த மௌனம். நினைப்புஅற நிற்கும் இடம். ஆசை உற்பத்தியாகும் மூலத்தானம். அந்த இடத்தை அடைவதற்காகச் செய்யும் முயற்சியே யோகமாகும். ஆசை அல்லது எண்ணங்கள் சூட்சுமமாக உற்பத்தியாகி பைசந்தி மதத்திமையாகி வைகரியாக வெளிப்படுகிறது. சூட்சுமம் புறப்படுமிடமாகிய ஆசையற்ற நிராசையெனும் பூமியில் நிலைத்திருப்பதே ஞானியரின் அரிய செயல். அவர்களே ஈசன் இருக்கும் இடத்தை அடையவல்லார்,

வாசியும் ஊசியும் பேசி வகையினுல்
பேசி யிருந்து பிதற்றிப் பயனில்லை
ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்
ஈசன் இருந்த இடம்எளி தாகுமே

என்று திருமூலர் தெளிவுபடுத்தினுர். இம் மார்க்கத்தினைத் தாயுமானவர் தமக்குக் குருவாக மௌனகுருவானவர் படிப்படியாக உபதேசித்தருளியதைக் கூறுகிருர்.

பற்றுவன அற்றிடு நிராசையென் ருெருபூமி
பற்றிப் பிடிக்கும் யோகப்
பாங்கிற் பிராணலயம என்னுமொரு பூமிஇவை
பற்றின் மன மறும்என்னவே
கற்றையஞ் சடைமௌனி தானே கனிந்தகனி
கனிவிக்க வந்தகனிபோல்
கண்டதிந் நெறியெனத் திருவுளக் கனிவினெடு
கனிவாய் திறந்தும்ஒன்றைப்
பெற்றவனும் அலலேன பெருதவனும் அல்லேன்
பெருக்கத் தவித்துளறயே
பெண்ணீர்மை என்ன இரு கண்ணீர் இறைத்துநான்
பேய்போ லிருக்கஉலகம்
சுற்றிநகை செய்யவே உலையவிட் டாயெனிற்
சொல்லஇனி வாயுமுண்டோ
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

புழுவானது ஒன்றைப் பற்றிப் பற்றி விட்டுச் செல்லும் இயல்புடையது. மனமும் அத்தன்மைத்தேயாம். "பற்றுவெகு விதமாகி ஒன்றைவிட்டு ஒன்றணைப் பற்றியுழல் கிருமிபோலப் பாழ்ஞ் சிந்தை" என்பர் தாயுமானுரும். புழுவைப்போல ஆசைகளின்பால பற்றிப் பற்றிச் செல்லாமல், நிராசையென்னும் பூமியில் நிற்றல் யேண்டும். அதற்குப் பிராணன் லயமாக வேண்டும். அஃதாவது ரேசகம் பூரகம் என்னும்

உச்சுவாச நிச்சுவாசங்களற்று கும்பகமாக வேண்டும். இதற்குப் பயிற்சிகள் பல உள. இவற்றை முறைப்படி ஆசிரியர் வசம் தெளிதல் வேண்டும். இங்ஙனம் பிராணன் லயப்பட்டவுடன் மனம் ஒருமித்து விடும், உருள்பெருந்தேரை நிறுத்துவதற்குக் கட்டை போடுவதுபோல, பகுத்தறிவைக்கொண்டு அறிவை அறிந்து முறையே நிறுத்தல் வேண்டும். இவர்களே சன்மார்க்க சகமார்க்க சற்புத்திர மார்க்க தாச மார்க்கியும் ஆவார். இக் கருத்தை விளக்கும் சிவஞான சித்தியாரின் ஒரு பாடலைக் காண்பாம்.

சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி இரண்டும்
சலிப்பற்று முச்சதுர மூலாதா ரங்கள்
அகமார்க்க மறிந்தவற்றின் அரும்பொருள்க ளுணர்ந்தங்
கணைந்துபோய் மேலேறி அருள்மதிமண் டலத்தின்
முகமார்க்க அமுதுடலம் முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகள்
உகமார்க்க அட்டாங்க யோக முற்றும்
உழத்தலுழந் தவர்சிவன்றன் உருவத்தைப் பெறுவர்.

அறிவைப் புலன்களின்வழிச் செல்லவொட்டாமல் தடுத்து கும்பக நிலையில் முச்சதுர மூலாதாரம் எனப்படும் புருவமத்தியிடை நிறுத்த வேண்டும்.

கண்ணுக்கு மூக்கடியோ காதோர மத்திபத்தில்
உண்ணுக்கு மேலேறி உன்புதுமை மெத்தவுண்டு
உண்ணுக்கு மேலேறி உன்புதுமை கண்டவர்க்கு
கண்ணுக்கு மூக்கடியோ என் கண்ணம்மா
காரணங்கள் மெத்தவுண்டே

என்று அழுகணி சித்தர் கூறியவாறும், புருவமத்தியிடை நின்று அகமார்க்கமாகச் சென்று ஆங்கே தோன்றும் அரும் பொருளை யுணர்தல் வேண்டும். பொருளாகக் கண்ட பொருள் எவைக்கும் முதற் பொருளைக் காணுமிடம் அதுவேயாகும். "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்பதுபோல, சிறந்த பொருளாகிய மனவெளியில் கலக்கவரும் நல்ல வுறவோடு சிற்பர வெளிக்குள் அனுபவிக்க வேண்டும். சான்றோரனைவரும் இப்பொருளுக்கே வணக்கஞ் செலுத்தினர். "சிற்பர வெளிக்குள் வளர் தற்பரமதான பரதேவதையை அஞ்சலி செய்வாம்" என அப் பொருளுக்கே தாயுமானுர் வணக்கஞ் செலுத்தினுர். பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளையாகிய ஸ்ரீ ஆண்டாளும், அம்பரம் ஊடறுத்து ஓங்கி யுலகளந்த உம்பர் பெருமானை வணங்கினுள்.

அகமார்க்கமாகச் சென்ற இவர்கள் அப்பொருளை அணைந்து மேலும் மேலும் உட்புகுந்து அலர்மதி மண்டலத்தினின்றும் விளைகின்ற அமிர்தத்தை வாரிப் பருகினர். அமிர்தத்தை யுண்டவர்கள் மீண்டும் மனுநிலைக்குத் திரும்பியதும் உலகத்தவரை அழைத்தனர்.

காகம் உறவு கலந்துண்ணக்
கண்டீர் அகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்

ஏக வுருவாய்க் கிடக்குதையோ
இன்புற் றிடநா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாரும் செகத்தீரே

என்று தாயுமானவரும் உலக மக்களை அறைகூவி அழைக்கின்ருர். அந்த அழைப்பை ஏற்றே யோகாசன ஆலயமும் மக்களை அழைக்கின்றது. இந்நிலைக்குத் தம்மை ஆளாக்கிய மௌனகுருவை நினைந்து சுவாமிகள் "அறிவாக நின்ற நிலையில் சிந்தையற நில்லென்று சும்மா இருத்தி மேல் சின்மயானந்த வெள்ளந் தேக்கித் திளைத்து நான் அதுவாயிருக்க நீசெய்சித்ர மிகநன்றுகாண்" என குருமரபினை வாழ்த்துகின்ருர். மாணுக்கன் கர்ப்பூரம் போலிருந்தால் உடனே பற்றுவர். வாழை மட்டையென இருப்பின் பற்ற முடியாது.

இவ்வாறு அமிர்தமதி மண்டலத்தில் அமிர்துண்டு முழுச் சோதி நிலவில் நிலைபெற்றிருப்பவரே சன்மார்க்க முதலான நன்மார்க்கிகளாவார். இவர் இயம முதலான யோக அங்கங்கள் எட்டனையும் கடந்தோராவர். இவர்களே சோதிக்குள் சோதியான சிவத்தைக் காண்பர்! இந்நிலையே சுத்த சன்மார்க்கம் எனவும் படும்.

இந் நன்மார்க்கத்திற்குத் தடையாயுள்ளவை உலக ஏடணை, அர்த்த ஏடணை, புத்திர ஏடணைகளாகிய ஆசைகளேயாகும். இவற்றின் வயப்பட்டால், கற்றவை, கேட்டவை அனைத்தும் பயனற்றுத் தூர்ந்துபோம். முத்தியடைவதற்கான நல்விருப்பமும் அதனுல் பெறும் பயனையும் இழந்து விடுவோம். புலன்களின் வயப்பட்டு பெருங் கொடுமைக்கு ஆளாவோம் என்பதைச் சுவாமிகள் இப்பாடலில், "ஆசையெனும் பெருங் காற்றூடு இலவம் பஞ்செனவும் மனதலையுங் காலம் மோசம் வரும். இதனுல் கற்றதுங் கேட்டதுந் தூர்ந்து முத்திக்கான நேசமும் நல்வாசமும் போய் புலனுயிற் கொடுமைபற்றி நிற்பர்" என்றனர்.

ஆசையென்பது சற்றே தோன்றினுல் காம முதலான பத்து குணங்களும் தலையெடுத்துத் தந்தம் வழியே அறிவை இழுத்துப் பாழாக்கும். ஆகவே ஜாக்கிரதை! ஜாக்கிரதை! என எச்சரித்தனர் சானரோர்.

தீவிர சாதனையிலிருந்த போதும் ஆசைகளாகிய எண்ணங்கள் தோன்றி தன்னைத் துன்புறுத்தியமையை வள்ளற் பெருமான் வருமாறு கூறி நீதி கேட்கின்ருர்.

மாயையெனும் இரவில்என் மனையகத்தே விடய
வாதனையெனும் கள்வர்தாம்
வந்துமன அடிமையை எழுப்பி அவனைத்
தமது வசமாக உளவுகண்டு
மேயமதி யெனும்ஒரு விளக்கினை அவித்து
எனது மெய்நிலைச் சாளிகை யெலாம்
வேருற உடைத்துள்ள பொருளெலாங்
கொள்ளைகொள மிகநடுக் குற்றுநினையே
நேயமுற ஓவாது கூவுகின்றேன் சற்றும்
நீதியிலையோ தருமநெறி யுமிலையோ அருளின்

நிறைவு மிலேயோ என்செய்கேன்
ஆயமறை முடிநின்ற தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே.

எளியநடையில் வலிய பொருளை தெளிவுறக் கூறிக்கதறும் இப்பாடலினின்றும் இவர்தமக்கெலாம் ஆசையற்ற நிராசையெனும் பூமியில் நிற்கும் சாதனையே பெரிதென விளங்குகிறது. முத்தாகவும்' பவளமாகவும், பொற்சுடராகவும், இம்மூன்றும் ஒன்றுகலந்த அனுபவ முமே இவர்கள் வேண்டுவது. மனதினின்றும் எண்ணங்கள் தோன்று மெனில் பெற்ற இவ்வனைத்தும் இழந்து துன்புற்று வாடுவர். எனவே தாயுமானுர் பரம்பொருளை விளித்து, "தேசு பழுத்து அருள் பழுத்த பராபரமே நிராசையின்றேல் தெய்வ முண்டோ?" எனக் கேட்கின்ருர்.

நிராசை இல்லையெனில் தெய்வ அருளும் இல்லை. நிராசை யுடையவர்க்கு தேசு பழுத்து அருள் பழுத்திருக்கிறதாம். தேசு பழுத்து என்பது ஒளிபிரகாசிப்பதாகும். நம்முள்ளும் ஒளிநிறைந் திருக்கிறதா? இருள் நிறைந்திருக்கிறதா? பௌர்ணமியாக இருக்கின் ருேமா? அமாவாசையாக இருக்கின்ருேமா? எனில் அவரவர்க்கே வெளிப்படை.

பிரகாசிப்ப தென்பது ஓரெழுத்து! அதுவே குருவானவர் மாணுக் கர்க்கு அன்புடன் உவந்தளிப்பது. நாளடைவில் அதுவே லிங்கமாவது.

ஓரெழுத்து லிங்கமாய் ஓதும்அட் சரத்துளே
ஓரெழுத் தியங்குகின்ற உண்மையை அறிகிலீர்
மூவெழுத்து மூவராய் முளைத்தெழுந்த சோதியை
நாவெழுத்து நாவுளே நவின்றதே சிவாயமே

என்பர் சிவவாக்கிய சித்தர். அத்துவித வத்துவும் சொற் பிரகாச சத்துமாகிய ஒப்பற்ற அப்பேரொளியினைக் கண்டு மகிழ்ந்திருப்பர் சாதகர். அருள் பழுப்பதென்பது சாதனை வளர்வது அல்லது நிலைத்து நிற்பதாகும் "பரம்பரமாகி பக்குவம் பழுத்த பழவடியார்க்கு அருள் பழுத்துச் சுரந்து இனிதிரங்கும் தான கற்பகமே" என்பர் தாயுமானுர். ஆகவே புறத்தே வெளிப்படும் ஆசைகள் அனைத்தையும் அகத்தே நாம் செய்யும் சாதனை மீதே திருப்ப வேண்டும். அதுவே நிராசை என்று சொல்லிக் கூடிய இன்ப நிலைக்கு அழைத்துச் செல்லும். உலகப் பற்று விடுவதற்குப் பற்று அற்றவனுன பரம் பொருளைப் பற்ற வேண்டும் என்பதனைப், "பற்றுக பற்றற்ருன் பற்றினைப் பற்றுக அப்பற்று விடற்கு" எனவும், அவா இல்லாதவர்க்குத் துன்பமில்லை; அவா இருந்தால் எல்லா துன்பங்களும் மேலும் மேலும் வரும் என்பதை, "அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம் அஃதுண்டேல் தவாஅது மேன்மேல் வரும்" எனவும் திருக்குறள் பகர்வதை சிந்திக்கக் கடமைப் பட்டுள் ளோம்.

உள்ளத்தினின்றும் எழும் ஆசைகளை உலகத்தின்பால் செல விட்டால் நமக்குத்துன்பமே பெருகும் என்பதில் சற்றேனும் ஐயமில்லை. அவ்வாசைகளனைத்தையும் உள்முகமாகத் திருப்பி பிரம்மம் எனப்படும் ஒரு பொருளின் மீது செலத்துவோமெனில் எந்நாளும் இன்பமே அன்றித் துன்பமில்லை என்பதை இப்பாடலினின்றும் அறிகின்ருேம். சுவாமிகளின் ஆசையும் இதுவே என்பதை,

"ஆசை உன் மீதல்லால் அருளறிய வேறும் ஒன்றிற்
பாசம் வையேன் நின்கருணைப் பாங்காற் பராபரமே"

என்பதன் வாயிலாக அறிகின்ருேம்.

WINGS OF DIVINE WISDOM

BY YOGI SIVALINGAM—U. S. A.

Don't spend time for many thoughts,
Don't worry for wasting the time,
Don't be involved with mental thoughts.
Don't be involved with unsatisfactions,
Don't be involved with many comparisons,
Don't be involved with many creations,
Don't think "WHAT CAN I DO?" Oh boy!,
Don't keep in your mind "WHEN CAN I SEE HIM?"
Without any expectations, do for HIM and keep in your mind about HIS thoughts,
Mantra repeating will give great freedom,
Faith will give great understandings,
More questions give more confusion,
More questions give more stupidity,
More questions give more problems,
More questions give more difficulty
More questions give more anger,
More questions give more skinny body,
More questions give more greed,
More questions give more unsatisfactions.
Practice, practice, practice and clear your thoughts and Heart for HIM,
Practical only gives great freedom,
Practical only gives great satisfactions,
Do what is right and don't compare.
Do what is proper, all decided by yourself,
Do what you want, all decided by you,
Go wherever you want to go, all decided by you and clear after,
Follow and help many, but don't get involved,
Think to sit and worry—avoid and look within,
Looking and searching each corner nothing comes,
Wake up early mornings, touch within to practice the spiritual life.
Don't have expectations for anything,
Don't wait for anything,
Do by yourself and touching the Heart,
Heart and Guru and God all are one,
Book and mind teachings are limited, but the Spiritual experiences teach an ocean of knowledge,
Be sooper, be vigorous, be clear,
Mind and thoughts give great lower life,
Mind and thoughts give great dust life,
Mind and thoughfs give great dullness,

Mind and thoughts give great dumpness,
Mind and thoughts give great questions,
Mind and thoughts give great thinking,
Mind and thoughts give great worryness,
Mind and thoughts give great nothings,
Mind and thoughts give great emptiness,
Mind and thoughts give great sittings,
Mind and thoughts give great $ickness.
Mind and thoughts give great constipation,
Mind and thoughts give great watching the Television,
Mind and thoughts give great eatings,
Leave it to the Lord which is unknown or any question by meditation way.
Leave it to the Lord which you do want,
Leave it to the Lord which you don't know,
Leave it to the Lord which you want to know,
Leave it to the Lord which you do want to gain,
Leave it to the Lord which you do want to prosper and progress,
The sweet-heart of the Lord always knows each and everyone's life and wants,
Be giant and avoid the heart-beats,
Be vigorous which is yours,
Be clear which is yours,
Avoid the crazy rules and regulations,

பிறந்த நாள் விழா

யோகாசன ஆலய கணக்குப் பரிசோதகர் (Auditor) திருவாளர் J. ஹரிஹரகிருஷ்ணன் அவர்களின் செல்வக் குழந்தை திருவளர் செல்வி அபிராமியின் முதலாண்டு பிறந்த நாள் விழா சென்னை கோடம்பாக்கம் அவரது இல்லத்தில் 21—4—78 வெள்ளிக்கிழமை காலை கொண்டாடப்பட்டது. காதணி விழாச் சடங்கும் உடன் நிகழ்ந்தது. யோகாசன ஆலயத் தலைவர் உயர்திரு கோ. மு, சுவாமி அவர்களும் ஆலய அன்பர்களும் வருகை தந்து குழந்தையை வாழ்த்தியருளினர். நிகழ்ச்சியின் தொடக்கத்திலும் இறுதியிலும் ஆலய பிரார்த்தனை நிகழ்த்தப்பட்டது.

யோகாசன ஆலய அங்கத்தினர் திருவாளர் R. இராஜகுரு சாவித்திரி தம்பதிகளின் அன்புச் செல்வன் R. கோவர்த்தனின் முதலாண்டு பிறந்த நாள் விழா, சென்னை வண்ணையம்பதி அவர்கள் இல்லத்தில் 24—4—78 திங்கள் காலை 6-30 மணிக்கு நடைபெற்றது. யோகாசன ஆலயத் தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமியவர்கள் வேத வேள்வி வளர்த்து குழந்தையை வாழ்த்தியருளினர். ஆலய அன்பர்களும், நண்பர்கள் உறவினரும் வருகை தந்து வாழ்த்தினர்.

YOGASANAS

Translated versions of Mr. E. S. Rangaswami
(a great exponent of Yogasanas)

By Sri R. Meharbabu, B. Sc., M. A., B. T.

(Continued from previous issue)

YOGA

Right from the time of creation man wanted to know everything in all aspects Out of it came into existence philosophy knowledge and religion which are absolutely, necessary to man. He inferred that honesty is the basic principle for all things. According to the following slokam:

*"Nahi Sathyath Parodharma, Nanru thath pathakambaram
Nahi Sathyath Param Gnanam, Dasmath Sathyam Samasareth"*

He had strong belief in honesty. When he tried to know the facts in all, he came to a conclusion that he could not get suffici - ent life time, to gain full knowledge. Fact, knowledge and time are related to each other and so to look into these three factors jointly and to enjoy the fruits of it, will be the aim of our human being. As per Vedas. Upanishads and Sastras it is believed that one who follows these principles accordingly, would cartainly attain immortality or Moksha. Rig Veda, Yajur Veda, Sama Veda and Atharvana Veda are the four vedas which had been in existence right from the existence of man. These Vadas are explaining the above facts only.

"Esa Kena, Kada, Prachna. Ithreya, Taitreeya, Mundaga, Mandugya, Santhukki, Prahatharanyaga, Suvethasvaya."

The same facts ars explained in detail in the above eleven upanishads. Yoga, Nyaya, Sangya, Vaiseshiga, Poorvamimamsa and Uthiramimamsa are the six sastras known to us. They too explain these facts out of research experience to the world. From Brahma to sage Jaya all sages and saints explained the same truth. Out of these great sages, Pathanjali was one among them. He wrote Yoga sastras. Yoga means coupling or joining.

The creation of universe itself is a Yoga. Countless physical bodies or atoms join together or reacts with each other to form another or a different substance and five matters i. e. earth, water, fire, air and vaccum are the creations of Yoga. The earth we live, the ashta (eight) vasukkals (i. e. Dhavan, Dhuruvan, Soman, Vishnu, Anilan, Analan, Prabhasan and Prabavan) for the living beings, the circling Sun according to these time limitations. and the countless stars that appear to us emit the sunlight are the creations, according to the laws of Yoga. The plant that sprouts

of its seed, the embryo that grows in its mother's ovary are the creations of Yoga. So Yoga means joining or creating. With the great power and knowledge of Supreme Splendour, the atoms of Prakrit - Matter (different genders of the same species) join together resulting in the creations of the Universe. It is also called Kalpa or strengthening. This will exist for a particular period of time. Then the supreme atoms will leave from the prakrit or the body. This is called end or destruction. In between the creation and destruction, the great knowledge of Supreme Splendour standardise the middle period or stage.

The feature that takes its origin in the planets is also resulted inthe embryo or the human body. As for as human body is concerned Sage Pathanjali says " Yogachchitha virithi Nirodhana " Katobanished says "Aathmentheriya mano yuktham Boktheth thyanoor Manishina:" Just as Paramathma (The Supreme Soul) Prakrit or Matter and the great knowledge that strengthen the period of life in the creations of the Universe, Athma (soul) Inthriam (senses) and Mind or knowledge or decision strengthen the time limit for the ultimate attainment of the Supreme-Moksha. Mind or decision is nothing but a kind of abstract matter. The Supreme bliss of great knowledge and the strength although absent to the small sense, with the strength of cleverness, the reins of mind commands the horses of five senses and the soul that takes its journey in the chariot would reach its destination of the ultimatum of the Soul Supreme. This is known as Yoga.

The nature of mind or decision is to develop or magnify or spread over. This is to be consolidated or converged. When mind is made converged it will be under control. If mind is under our control, the senses will also be under control. The knowledge of our soul will shine like the great divine knowledge of the Soul Supreme. So far the matters that are not known to us will become as clear as crystal.

The diverged rays of sun could easily be made converged by means of a convex lens. These converged rays have the magnificent power of destroying things, into ashes. In the similar way, the power of converged mind will have the magnificent power to penetrate deep into the matter and acquire the skill and ability to understand perfectly. So a Yogi or sage out of his various practices, ameliorate the soul, senses and mind amenable and able to get the enlightenment of the ever existing and all Pervading - The Supreme Bliss. This according to the tellings of Vedopanishads, is the stage of immortality of soul or Moksha.

Let us explain the nature and practice of Yogasanas in the next issue.

சக்தி - I

S. முருகேச பாண்டியன் B.E.,

(மலர் 30 இதழ் 12-ன் தொடர்ச்சி)

அண்டங்கள் முதல் அணுக்கள் ஈருக யாவும் பெருவெளியில் இயங்கிக்கொண்டிருப்பதாக முன் கட்டுரையில் பார்த்தோம். அவ்வாறு அண்டங்களும் அணுக்களும் சதாகாலமும் இயங்குவதற்குக் காரணம் சக்தியாகும்.

இச் சக்தியானது மூன்று மண்டலங்களினுல் செயல்படுகிறது. முதலாவது புவிஈர்ப்பு மண்டலம்; இரண்டாவது நிலை மின் மண்டலம; மூன்ருவது காந்த மண்டலம். எல்லாப் பொருள்களுக்கும் இம் மூன்று மண்டலங்களும் அதனைச் சுற்றிலும் வியாபித்துள்ளன. அம் மண்டலங்கள் ஒன்ருேடொன்று செயல்படுவதனுல் அப் பொருள்கள் யாவும் வெவ்வேறு விதமாக இயங்குகின்றன.

அணுவின் மையக் கருவினுள்ளே நேர் மின்னேற்றம் பெற்ற புரோட்டான்களும், மின்னேற்றம் ஏதுமில்லாத நியூட்ரான்களும் உள்ளன. நேர் மினனேற்றம் கொண்ட புரோட்டான்களை சிதறி ஓடாமல் இணைத்து வைத்திருப்பது ஓர் ஆச்சரியமான சக்தியாகும். செகத்தையெல்லாம் அணுவளவும் சிதரு வண்ணம் சேர்த்தணுவில் வெப்பை அணுத்திரளை யெல்லாம் மகத்துவமாய் பிரமாண்டமாகச் செய்ய வல்லவா நீ நினைத்தவாறே எல்லாம் என்ற தாயுமானவரின் கூற்று இங்கு சிந்திக்கத் தக்கது. இது பரிமாற்ற சக்தி (exchange forces) என அழைக்கப்படும். மையக் கருவிலுள்ள நியூட்ரானகளும புரோட்டான்களும் தங்களுக்குள் மீசான் (Meson) எனக கூறப்படும நுண்ணணுக்களைப் பரிமாறிக் கொள்கின்றன. இதனுல் அவற்றிற்கிடையே தோன்றும் சக்தியானது அணுவின் மையக் கருவினை ஒன்ருக இணைப்பதற்குப் போதுமானதாகிறது. இதன் காரணமாக மையக் கருவின் எடை அதிலுள்ள நுண்ணணுக்களின் எடையைவிட சிறிது குறைவாகவுள்ளது. இது அவ்வணுவின் எடைக் குறைவு எனக் கூறப்படும

தக்க சூழ்நிலையில் இரண்டு அணுக்கள் ஒன்ருகச் சேரும்போதோ அல்லது ஓர் அணு இரண்டாகப் பிரியும்போதோ இரு வெவ்வேறு வகை அணுக்களுக்கும் இடையே உள்ள எடைக் குறைவின் வேறுபாட்டினுல் சிறிதளவு பொருள் சக்தியாக மாற்றம் பெறுகிறது. இதுவே அணு சக்தி எனப்படும்.

சக்தியானது பொருள்களின் மூலமாக மட்டுமன்றி தனித்தும் இயங்கவல்லது. அந்நிலையில் அது மின்காந்த அலைகள் என்று அழைக்கப்படும்.

(தொடரும்)

THE NEED FOR YOGA FOR ALL IN DAILY LIFE

KALPA—*Continued.*

If neglected, we die of poisons created by our own body. The poison which ought to have been eliminated quickly are thrown into the blood. Yogasanas make the body and its organs strong. They build not only muscles and bones but they make excretary system and secretionary glands, respiratory organs, nerves and the brain strong enough to keep themselves in perfect health.

In order to appreciate the problem of good health, one must first be appraised of the causes and consequences of ill health. It is a scientific fact that heriditary weakness transmitted individually, the unsanitary environments and unfavourable psychological circumstances contributed to ill health when no efforts are made to improve them. But, the real cause of ill health for which every individual should be personally held responsible. Their ignorance and errors contribute mainly to ill health. Each one is responsible for one's own sickness. It is even advocated that a man is just as much responsible for his ill health as he is for ill actions, and that the same should become punishable under law. People who treat their body as they please and transgress rules of personal hygiene of which they should have a definite understanding, are physical sinners. They are not only committing a crime against themselves but often against their dependants and future generations. It all depends upon the cooperation that you offer to the Nature. Nature gives warning long before the actual trouble starts and if one is careful in adopting preventive measures immediately, the evil that follows could be very easily avoided, A disease is usually a warning and an outlet for Nature to adjust herself before more serious damage could be done to the most important organs. In youth the vitality given by the Nature to an individual is at its height. Many diseases can be resisted.

இரங்கற் செய்தி

யோகாசன ஆலய மகளிர் பிரிவு மௌன வகுப்புச் செயலாளர் திருமதி N. இராஜம்மாள் அவர்களின் அன்புக் கணவர் திருவாளர் A. நாராயணன் அவர்கள் 8—5—78 திங்கள் இரவு 11 மணிக்கு சென்னை வண்ணையம்பதி சோலையப்பன் தெருவிலுள்ள தம் இல்லத்தில் பூதவுடலை விடுத்து இறைவன் திருவடி நீழல் எய்தினார்கள். யோகாசன ஆலய தலைவர் உயர்திரு சுவாமியவர்களும், ஆலய அன்பர்களும் சென்று மறைந்த பெரியாரின் ஆன்மா அமைதிபெற பிரார்த்தனையும், தாயுமானவர் பாடல்களும் பாடி இறுதி வணக்கஞ் செலுத்தினர். பிரிவுத் துயர்படும் அம்மையார் அவர்களுக்கும் சுற்றத்தினர்க்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(ஆ. ர்.)

யோகாசன ஆலய சிறப்புக்கூட்ட நிகழ்ச்சிகள்
விருதுநகர்

விருதுநகர் ஸ்ரீ வாலசுப்பிரமணிய சுவாமிகள் கோவில், உயர்திரு மு. அ. ஏகாம்பர நாடார் திருவாதிரை மண்டபத்தில், 7—5—78 ஞாயிறு இரவு 7-30 மணிக்கு சிறப்புரை நிகழ்ச்சி விழா நடைபெற்றது. உயர்திரு T. M. M. ராஜாக்கனி நாடார் அவர்கள் விழாவுக்கு தலைமை வகித்தார்கள். விருதுநகர் V. V. வன்னியப் பெருமாள் மகளிர் கல்லூரி முதல்வர் திருமதி அனுசூயாதேவி பாலகிருஷ்ணன் M.A. B.T., அவர்கள், மகரிஷி தாயுமானவரின் திருப்பாடலுக்கு விளக்கவுரை ஆற்றியதோடு யோகாசன ஆலய சேவையைப் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

தலைவர் உயர்திரு T. M. M. ராஜாக்கனி நாடார் அவர்கள், தலைமையுரையில், எத்தனை கோடி பணமிருந்தாலும் நிம்மதி கிடைப்பதில்லை. இவ்வாலயத்தில் மன அமைதியும் உள நிறைவும் பெறுகிறோம் என்று உணர்ச்சிப் பொங்கப் பேசினார்கள். செயலர் திருவாளர் M. P. A. S. நடராஜ நாடார் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். திருமதி மீராதேவி தியாகராஜன் அவர்கள் நன்றி கூறினார்.

யோகாசன ஆலய அமைப்பாளர் திரு. பி. வெங்கடேசன் அவர்கள் விருதை கிளைகளில் சிறப்புரை நிகழ்த்தினார்கள். 25—4—78 செவ்வாய் இரவு 7 மணியளவில் திருமதி K. P. K. மகமாயி அம்மையார் இல்லத்தில் "தாயுமானர் கேட்ட வரம்" என்னும் பொருளில் விரிவுரையாற்றினார்கள். திருமதி ஜானகி ஆறுமுகம் அவர்கள் வரவேற்புரையும் திருமதி மீரா தியாகராஜன் அவர்கள் நன்றியும் நவின்றனர்.

26—4—78 புதன் காலை 10 மணியளவில் இந்து சமய வளர்ச்சிக் கழகத்தில், 'தொண்டு' எனும் பொருளில் அருளுரை நிகழ்த்தினார்கள். திருமதி வசந்தா அவர்கள் வரவேற்பும் திருமதி S. சரஸ்வதி அவர்கள் நன்றியும் கூறினார்கள், திருமதி கமலம் அருணாசலம் பிரார்த்தனை பாடினார்கள்.

இரவு 6-30 மணியளவில் 'சமரச நிலை' என்னும் பொருள்பற்றி இராமமூர்த்தி வீதி, 203 எண் இல்லத்தில் சிறப்புரை நிகழ்த்தினார்கள். அவ்வமயம் விருதை யோகாசன ஆலய செயலாளர் திரு M. P. A. S. நடராஜன் அவர்கள் வரவேற்புரை அளிக்க, திருமதி M. நாகலோசனி அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள். திருமதி தனலட்சுமி பன்னீர் செல்வம், பிரார்த்தனை பாட கூட்டம் இனிது நிறைவு பெற்றது.

ஒவ்வொரு கூட்டத்திலும் அன்பர்கள் திரளாக வருகை தந்து இன்புற்று மகிழ்ந்தனர்.

தொகுப்பு: திருவாளர் M. P. A. S. நடராஜன்.

நன்றி

14—4—78ல் நடைபெற்ற மகரிஷி தாயுமானவர் திருநாளில் சென்னை "ஆனந்த போதினி" ஸ்தாபகர் உயர்திரு நாகவேடு முனிசாமி முதலியார் அவர்கள் நினைவாக தாயுமானவர் பாடல் 100 கொண்ட புத்தகங்கள் 1000 அச்சிட்டு அன்பளிப்பாக வழங்கினமைக்காக உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொதுச் செயலர்
யோகாசன ஆலயம்.

பாராட்டு விழா

யோகாசன ஆலயம் வடசென்னையில் தொடங்கிய நாள்முதல் ஸ்ரீமத் தட்சணாமூர்த்தி மடத்துக் கிளைச் செயலாளராகச் சீரிய பணி புரிந்த புலவர் திருவாளர் கே. முருகேசனார் அவர்களைப் பாராட்டி 9—5—78 செவ்வாய் மாலை 6 மணிக்கு விழா நடைபெற்றது. திருவாளர் S. K. மலைக்கனி அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

சென்னை வண்ணையம்பதி திருவொற்றியூர் நெடுஞ்சாலை இராமா நாய்க்கன் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு யோகாசன ஆலய நிறுவனர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் தலைமை வகித்தார்கள். யோகாசன ஆலயத்தின்பால் தளராத நம்பிக்கைக் கொண்டும் உயர்திரு சுவாமி அவர்களின் அன்புக் கட்டளையைச் சிரமேற் கொண்டும் தன்னளவு அயராது தொண்டுபுரிந்த அவர்களின் சேவையைப் பாராட்டி, அன்பர்கள் உயர்திருவாளர்கள் திருக்குறள் சங்கரன் செட்டியார், வீரஜின்னு செட்டியார், பொதுச் செயலாளர் C. இராமசுவாமி, N. குருலிங்கம், மு. முனிரத்தினம், V. நரசிம்மலு, மகளிர் பிரிவு செயலர் செல்வி R. சாந்தி B.Sc., ஆகியோர் சிறப்புரை வழங்கினர்.

யோகாசன ஆலய வடசென்னை அன்பர்கள் சார்பில் வழங்கப்பட்ட கைத்தறி வேட்டி பட்டுத் துண்டு ஆகியவற்றை சுவாமிகள் அவருக்குப் போர்த்திப் பாராட்டி வாழ்த்தியருளினர். விழா ஏற்றவரின் அன்புச் செல்வங்களாய நவநிதிகளின் சார்பில் சிறப்புச் செய்யப்பட்டது. புலவர் பா. ஆழ்வார் அவர்கள் கைத்தறித் துண்டும் பாராட்டுரையும் வழங்கினார். அவரின் அன்பு மாணாக்கரும், நண்பர்களும் அன்பளிப்புகள் வழங்கினர். அமைப்பாளர் திரு. பி. வெங்கடேசன் அவர்கள் பாராட்டு இதழைப் படித்து வழங்கினார்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்தும் யோகாசன ஆலயத்தின் தன்னலமற்ற சேவையைப் போற்றியும் திருவாளர் புலவர் கே. முருகேசனார் அவர்கள் உருக்கமான உரை நிகழ்த்தினார்கள். யோ. ஆ. வடசென்னை செயலர் திரு. S. முருகேச பாண்டியன் அவர்கள் நன்றியுரை கூற பிரார்த்தனையோடு விழா நிறைவு பெற்றது.

ஸ்ரீமத் தட்சணாமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழாவில் யோகாசனாலய நிகழ்ச்சிகள்

சென்னை வண்ணையம்பதி ஸ்ரீமத் தட்சணாமூர்த்தி சுவாமிகளின் குருபூஜை விழாவில் 1—5—78 மாலை 6 மணிக்கு யோகாசனங்கள் செய்து காண்பிக்கப்பட்டது. அன்பர்கள் T. K. முருகவேள், M. குமாரசுவாமி, M. வேல், சண்முகம், ரூபலிங்கம் ஆகியோர் யோகாசனங்களைச் செய்தனர். திரு. N. கிருஷ்ணன் நன்மைகளை விளக்கினார். புலவர் திரு. பா ஆழ்வார் வரவேற்புரையும் திரு. பி. வெங்கடேசன் நன்றியும் நவின்றனர்.

3—5—78 காலை 10 மணிக்குப் பூசையின்போது புலவர் திரு. பா. ஆழ்வார் அவர்களின் அருளிசை நடைபெற்றது.

ஆலயக் கொள்கை ஆறு

புலவர் பா. ஆழ்வார்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் உலகில் இயற்கையாகவே நடைபெற்று வருகின்றன. ஓரறிவு முதல் ஐயறிவு வரையுள்ள உயிரினங்களுக்கில்லாத ஓர் தனிப்பான்மை ஆறறிவுபெற்ற மனிதவர்க்கத்திற்கே உண்டு. மனிதனின் சிற்றறிவுக் கெட்டியவரை ஒன்றைப்படைத்தும் காத்தும் அழித்தும் வருகிறான். பேரறிஞனாகிய பரம் பொருளும் பூமி முதலான அண்டங்கள் பலவற்றைப் படைத்தும் காத்தும் அழிக்கவும் வல்லவனாயிருக்கின்றான். இம் முத்தொழிலைச் செய்பவர் பிரம்மன், விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூவர் என புராண வாயிலாகப் பகர்ந்தனர் சான்றோர். இம் மூவருக்கும் முதல்வனாக விளங்கும் பரம்பொருளே முத்தொழிலுக்கும் சாட்சியாக இருந்தும் அவற்றில் சற்றேனும் பற்றின்றியும் இருக்கிறான். இதுவன்றோ வியப்புக்குரியது ! சிந்தனைக்குரியது !! இங்ஙனம் வியப்பவர் தாயுமானவர்.

"ஆக்கி யளித்துத் துடைக்குந் தொழில் அத்தனை வைத்தும்; எள்ளத்தனையேனும் ;தாக்கற நிற்குஞ் சமர்த்தன்-உள்ள; சாட்சியைச் சிந்திக்கத் தக்கது தோழி".

மூலப் பரம்பொருளின் பிரதிநிதிகளாய மூவருள் விஷ்ணு காக்குங் கடவுளாகிறார். மாந்தருள் பெரும் பகுதியினரும், தேவரும் பொருள் வேண்டியும் காத்தருளவேண்டியும் விஷ்ணுவைப் பிரார்த்திப்பதைக் காண்கிறோம்.

வேதாந்திகள் பிரணவம் எனப்படும் ஓங்காரத்தை எழுத்து (வரி) வடிவில் பிரித்துக் காண்பிக்கின்றனர். எழுத்துக்களுள் முதன்மையானது 'அ' கரம், இவ்வகரத்தை முதலாகவைத்தே பொய்யாமொழிப் புலவரும் திருக்குறளைத் தொடங்கியுள்ளார். அவ்வகரமும் உகரமும் சேர்ந்தே ஓங்காரமாகும். அதனோடு 'ம'கர ஒற்றெழுத்துச் சேர்ந்தே 'ஓம்' என்பதுருவாயிற்று. தமிழிலக்கம் எட்டுக்கு 'அ'கரமும் இரண்டுக்கு 'உ'கரமும் குறியாகும் 'ம'கரம் பத்தாவது வைத்து எண்ணப்படும். திருமந்திரம் இதனை மறைபொருளாகப் பேசும். எட்டும் இரண்டும் இனிதறிகின்றிலர், எட்டும் இரண்டும் அறியாத ஏழையர், எட்டும் இரண்டும் இருமூன்று நான்கெனப் பட்டது சித்தாந்த சன்மார்க்கப் பாதமே.

பத்து என்பதற்கு 'ய'கரமே குறியாகும். யகாரம் சிவனைக் குறிக்கும் எழுத்துமாகும். இதனை (சிவனை) அறியாதவர் எட்டும் இரண்டும் பத்தென்பர். இதனை விரிக்கின் பெருகும் என அஞ்சிவிடுக்கின்றனம். பிரணவத்தின் விளக்கம் அறியாத பிரம்மனும் முருகனால் சிறைப்பட்டான். சிவன் மாணுக்கன் நிலையில் இருந்து முருகனிடம் விளக்கம் கேட்டார் என்பது புராணம் இவ்வளவு மேன்மையானதும் மறைபொருளுமான இச் சொல்லின் உண்மை குரு மாணுக்கர் நிலையிலேயே அறிவதென வாழையடி வாழையென தொடர்கிறது. சைவ முதலான சமயங்கள் அனைத்தும் ஓங்காரத்தை முதன்மையாக ஏற்கின்றன. எனவே ஒப்பற்ற இச் சொல்லின் உண்மையை யாவரும் அனுபவ வாயிலாக அறியக் கடப்பாடுடையேமாவோம். தோன்றல், நிலைபெறுதல்

[ராப்பர் 3-ம் பக்கம் பார்க்க)

கைவல்ய வேதாந்த உரை!

பிரதி புதன்கிழமை இரவு 7 மணிக்குச் 'சென்னை மண்ணடி லிங்கி செட்டித் தெரு 121, அருள்மிகு செல்வ விநாயகர் கோவிலில் யோகாசன ஆலய தலைவர் உயர்திரு சோ. மு, சுவாமி அவர்களால் 'கைவல்யம்' வேதாந்த விரிவுரை நடைபெறுகிறது. அன்பர்கள் யாவரும் கலந்து நற்பேறு பெறுக!

S. முருகேச பாண்டியன்,
வடசென்னை செயலர்,
யோகாசன ஆலயம்.

மறைதல் ஆகிய அகர, உகர, மகரத்திற்குப் பிரம்மா விஷ்ணு ருத்திரராகப் பொருள் கொண்டனர்: நிலை பெறுதலாகிய தொழிலைச் செய்யும் விஷ்ணு எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான்- எனவே விஷ்ணு மயம் 'எனக் கூறப்பட்டுள்ளது- யோகாசன ஆலயம் சைவ வைணவ பேதமின்றி உட்பொருளை உணர்ந்து கொள்கையாக அமைத்திருப்பது யாவரும் போற்றி ஏற்றுக்கொள்ளும் வண்ணம் அமைந்துள்ளது.

பொன்னுன மந்திரம் புகலவும் ஒண்ணுது
பொன்னுன மந்திரம் பொறிகிஞ்சு கத்தாகும்
பொன்னுன மந்திரம் புகையுண்டு பூரிக்கிற்
பொன்னுகும் வல்லோர்க் குடம்புபொற் பாதமே

பொன் போன்ற சிறந்த திருவைந்தெழுத்து மந்திரத்தின் பெருமையினை அளவிட்டுக் கூறமுடியாது. அம் மந்திரத்தினை உதட்டளவில் கணித்தல் வேண்டும். மூச்சோடு கலந்த பயிற்சியுடன் கணித்தால் உடம்பு பொன் வண்ணமாகும். அதனோடு கலந்து நிற்பார்க்குத் திருவருளால் அவரின் உடல் அருளுடல்ஆகும்.

—திருமந்திரம்

முக்கிய அறிவிப்பு!
'யோகாஸன ஆலய விஜய'
சந்தாதாரர்களுக்கு,

அன்புடையீர் !

சென்னை மாநகரில் இல்லங்களின் எண்கள் மாற்றப்பட்டு வருவதால், அன்பர்கள் மாற்றப்பட்ட எண்ணைக் குறிப்பிட்டு சரியான முகவரியை எழுதியனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அனுப்பவேண்டிய முகவரி :

C. இராமசாமி,
9/4, கிருஷ்ணபுரம்,
சூளைமேடு, சென்னை-600094

Edited & Published by Sri N. Gurulingam, Pracharagar, Yogasana Alayam, 9-4, Krishnapuram, Kodambakkam, Madras-600094. Printed by Sri C. M. Sivaraman, at T. G. Sambandam & Co., Counian Press, 41, Broadway, Madras-600001. (May-1978)